நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 28.06.2019

2019ம் ஆண்டு ஜூன் மாதம் 28.06.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.கி.ஜெயராமராஜா, எம்.ஏ.,
ஆணையாளர்(பொ) மற்றும் தனிஅலுவலர்

**1)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜூன் **2019**ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் 423:** பதிவுசெய்யப்பட்டது.
(ந.க.எ.ண்.2146/2019/சி1)

2) இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூன் **2019**ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் 424:** பதிவுசெய்யப்பட்டது.
(ந.க.எ.ண்.2146/2019/சி1)

**3)** இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் திரு.ஏ.மாரிச்சாமி மற்றும் **17** நபர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதில் மேல்முறையீடு மற்றும் மறுசீராய்வு நகராட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டதில் மீண்டும் அவர்களுக்கு சாதகமாக **30.05.2017** ல் தீர்ப்பாகியுள்ளது அதன்மீது, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: **35083/2013/து3** நாள்:**14.06.2017** ல் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய கோரியதன் அடிப்படையில், டெல்லி உச்சநீதின்றத்தில் SLP(C) No.21654/2017 வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கிற்கு திரு.ஐ.கணேசன், அரசு வழக்கறிஞர் டெல்லி உச்சநீதிமன்றம் அவர்களின் **10.12.2018** ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் கோரியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| • Towards Legal Fees for appearance SLP( c ) No 22176/2018 dated 29.11.2018 | : | **ரூ.10000/–** |
| • SLP(c)No21654/2017/2018 dated 10.12.2018 | : | **ரூ.10000/–** |
| • Fresh process fee with paper book to all respontents | : | **ரூ.12000/–** |
| **மொத்தம்** | : | **ரூ.32000/–** |

<u>**அலுவலகக்குறிப்பு :–**</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் 425:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.2760/2012/எச்1)**

4) இந்நகராட்சி குப்பை கிடங்கில் பிரித்தெடுக்ககூடிய பிளாஸ்டிக் கழிவுகளை ஏற்கனவே அரியலூர் Ultratech Cement நிறுவனம் மூலம் இறுதியாக்கம் செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருவது போல் சேலம் சீலைநாயக்கன்பட்டி, MGR நகர் கதவு இலக்கு 75ல் இயங்கி வரும் SS. Green energy என்ற நிறுவனம் மூலம் மேற்கண்டவாறு இறுதியாக்கம். செய்திடவும் அதற்கான ஒப்பந்தம் தயார் செய்யவும் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 426:** அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண். /2019/H2)**

5) போடிநாயக்கனூர் நகராட்சியில் **2018-19 –ம் ஆண்டு நகர் ஊரமைப்பு வாரிய நிதியின் கீழ்** போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.32 சிட்னி விளையாட்டு மைதானத்தில் நடைபயிற்சி தளம், சுற்றுச்சுவர் உயர்த்துதல் மற்றும் தண்ணீர் வசதி செய்யும் பணி செய்வதற்கு 19.06.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு. G.முத்துகோவிந்தன்,
   தேனி – அல்லிநகரம்.
2. திரு. G.முரளிதரன்,
   தேனி – அல்லிநகரம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் ஒப்பந்தப்புள்ளியில் கோரியபடி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் சரிபார்க்கப்பட்டு, தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.32 சிட்னி விளையாட்டு மைதானத்தில் நடைபயிற்சி தளம், சுற்றுச்சுவர் உயர்த்துதல் மற்றும் தண்ணீர் வசதி செய்யும் பணி. | ரூ.25.00 இலட்சம் | திரு. G.முத்துகோவிந்தன், தேனி – அல்லிநகரம். | 4.95% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு. G.முரளிதரன், தேனி – அல்லிநகரம். | 8.00% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள திரு. G.முத்துகோவிந்தன், தேனி–அல்லிநகரம் என்பவரிடம் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், கட்டுமான பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும், பணியாளர் சம்பளம் தரக்கட்டுப்பாட்டு விலை விபர அட்டவணையை விட கூடுதலாக இருப்பதாலும் விலையை குறைக்க இயலாது என கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக 4.95% வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.G.முத்துகோவிந்தன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும் மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மான எண் 427:** குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜி.முத்துகோவிந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.

கூடுதல் செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்: 4548/2017/இ1)**

6) போடிநாயக்கனூர் நகராட்சியில் **2018-19 –ம் ஆண்டு நகர் ஊரமைப்பு வாரிய நிதியின் கீழ்** போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.32 வது வார்டு சிட்னி விளையாட்டு மைதானத்தில் இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல் பணி செய்வதற்கு 19.06.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு. G.முத்துகோவிந்தன்,
   தேனி – அல்லிநகரம்.
2. திரு. G.முரளிதரன்,
   தேனி – அல்லிநகரம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் ஒப்பந்தப்புள்ளியில் கோரியபடி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் சரிபார்க்கப்பட்டு, தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.32 வது வார்டு சிட்னி விளையாட்டு மைதானத்தில் இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல் பணி. | ரூ.30.00 இலட்சம் | திரு. G.முத்துகோவிந்தன், தேனி – அல்லிநகரம். | 4.99% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு. G.முரளிதரன், தேனி – அல்லிநகரம். | 5.44% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள திரு. G.முத்துகோவிந்தன், தேனி–அல்லிநகரம் என்பவரிடம் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், கட்டுமான பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும், பணியாளர் சம்பளம் தரக்கட்டுப்பாட்டு விலை விபர அட்டவணையை விட கூடுதலாக இருப்பதாலும் விலையை குறைக்க இயலாது என கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக 4.99% வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.G.முத்துகோவிந்தன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும் மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மான எண் 428:** குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜி.முத்துகோவிந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.

கூடுதல் செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்: 4548/2017/இ1)**

7) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்கள் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்களில் எற்படும் பழுதுகளை 2019–20ம் ஆண்டிற்கு பழுது பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 429:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.3090/2019/இ1)**

8) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பள்ளிகள், புதிய பேருந்து நிலையம், நகர் நல மையம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தில் ஏற்படும் பழுதுப்பணி மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தனியார் மூலம் ஆண்டு பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 லட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்தும், ஆரம்ப பள்ளி கல்விநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 430:** அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.3088/2019/இ1)**

9) போடிநாயக்கனூர் நகராட்சியில் உள்ள மின்தூக்கியை 01.08.2019 முதல் 31.07.2020 வரை வருடாந்திர பராமரிப்பு செய்யவும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.65,000/–ஐ பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 431:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.3089/2019/இ1)**

10) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்து விநியோகம் செய்யும் பொழுது பயன்படுத்தும் போது செய்யப்படும் குளோரின் சிலிண்டர் பயன்படுத்தப்படுகிறது 2019–20 ம் ஆண்டுக்கு தேவையான குளோரின் சிலிண்டர் நிரப்புவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.3.00 லட்சத்தினை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 432:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண். 3091/2019/இ1)**

11) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான 1–ம் பகுதி, 7–ம் பகுதி, 10–ம் பகுதி (மேல்நிலைப்பள்ளி), 10–ம் பகுதி (ஆரம்பபள்ளி) ஆகிய நான்கு பள்ளிகளிலும் உள்ள சத்துணவு மையத்திற்கு வர்ணம் பூசவும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.00 லட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 433:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண். 3032 /2019/இ1)**

12) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு அலுவலக வளாகம் மற்றும் தலைமை குடிநீர் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர்களை ஆண்டு பராமரிப்பு (AMC) பணி மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.17,000/–ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 434:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.3134 /2019/இ1)**

13) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு அலுவலக வளாகம் மற்றும் தலைமை குடிநீர் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர்களை பழுதுகள் சரிசெய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.35,000/–ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 435:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.3133 /2019/இ1)**

14) போடிநாயக்கனூர் நகராட்சி 22வது வார்டு நகராட்சி பணியாளர் காலனி வளாகத்தில் உள்ள காய்ந்த வேப்பமரத்தின் கிளைகளை வெட்டி எடுத்துக்கொள்வதற்கு, 05.07.2019 மாலை 4.00 மணியளவில் பொது ஏலம்விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 436:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.3204 /2019/இ1)**

**15)** இந்நகராட்சிக்கு பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனம் TN 60 Z 3534 – டீசல் பம்ப் & அல்டினேட்டர் பழுது அடைந்துள்ளதால் ஓட்டுநர் திரு. மாரிமுத்து அவர்களால் மேற்படி பழுதுகளை பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி சரிசெய்யப்பட்டு அதற்கான செலவினப்பட்டியல்கள் இணைத்து செலவினத்தை தொகை கோரியுள்ளார் என அதற்கான செலவினத்தெகை ரூ.3060/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 437:** அனுமதிக்கப்பட்டது.

**( ந.க.எண். 5582/2018/எச்2).**

16) இந்நகராட்சிக்கு பொது சுகாதாரப்பிரிவின் மூலம் ஜுன் மாதம் 5–ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அதனடிப்பபடையில் து.ஆய்வாளர் அவர்கள். மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் விழிப்புணர்வு பேரணி, கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலம் விழிப்புணர்வு செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற இருப்பதால் உத்தேச செலவினம் ரூ.26000 ஆகும் என்று தெரிவித்துள்ளதால் மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 438:** அனுமதிக்கப்பட்டது.

**( ந.க.எண். 2228/2019/எச்2).**

17) போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2019–2020–ம் ஆண்டிற்கு தேவையான பிளிச்சிங் பவுடர் –10டன் & பினாயில் – 1000 லிட்டர் தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 439:** அனுமதிக்கப்பட்டது.

**( ந.க.எண். 2485/2019/எச்2).**

**18)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் –100டன் 2019–2020–ம் ஆண்டிற்கு தேவைப்படுவதால் தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 440:** அனுமதிக்கப்பட்டது.

**( ந.க.எண். 2484/2019/எச்2).**

19) போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN60S2049 – தகுதிச்சான்று காலாவதியாக உள்ளதால் மேற்கொண்டு வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய தனியார் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.75000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் 441:** அனுமதிக்கப்பட்டது.
**( ந.க.எண். 2159/2019/எச்2).**

20) இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவில் இயங்கிவரும் TN60S5118 & TN60S4741 ஆகிய வாகனங்களுக்கு தகுதிச்சான்று பெறுவதற்கு கீழ்க்கண்டவாறு செலவு செய்யப்பட்டு ஓட்டுநர் (TEXCO) திரு.முருகன் அவர்கள் அதற்கான செலவினத்தொகையை தருமாறு கோரியுள்ளார்.

| வாகன எண் | புகை சான்று பெறுவதற்கு ரூ. | வாகன பதிவுக் கட்டணம் ரூ. | சாலை வரி ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| TN60S5118 | **100/–** | **850/–** | **–** | **950** |
| TN60S4741 | **100/–** | **850/–** | **1525/–** | **2475** |
| **மொத்தம்** | | | | **3425/–** |

மேற்கண்ட தொகையினை மேற்கண்ட நபருக்கு வழங்கவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் 442:** அனுமதிக்கப்பட்டது.
**( ந.க.எண். 2310/2019/எச்2).**

21) போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் கழிவு நீர் ஊர்தி வாகனம் TN60Z3534 – தகுதிச்சான்று காலாவதியாக உள்ளதால் மேற்கொண்டு வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய தனியார் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.75000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் 443:** அனுமதிக்கப்பட்டது.
**( ந.க.எண். 2535/2019/எச்2).**

22) போடிநாயக்கனூர் நகராட்சி **13**வது வார்டு நகராட்சி காலனியில் குடியிருக்கும் திருமதி.நா.பழனியம்மாள் என்பவர் அடுக்குமாடி குடியிருப்பு மனை வேண்டி, இந்நகராட்சி ஆணையாளரை 7வது பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD).No.2354/2016 தொடரப்பட்டு, மேற்படி வழக்கானது **26.04.2019** ஆம் தேதி முடிவுற்றது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வாதிடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் இந்நகராட்சி நியமன அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமிபாண்டியன் என்பவர் வாதுரை கட்டணமாக ரூ.**9500/–** வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.எம்.கருப்பசாமிபாண்டியன் வழக்கறிஞருக்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை **2019–2020** ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
**தீர்மான எண் 444:** அனுமதிக்கப்பட்டது.
**( ந.க.எண்.3030/2019/எப்1.)**

23) போடிநாயக்கனூர் நகராட்சியில் 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதி முதல் நடைமுறையில் உள்ள கட்டிட சம்மந்தமான உரிமையாணை கட்டணங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 321 (2), 328 ) மற்றும் 329–ன் கீழ் மற்றும் அரசாணை எண்.18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்.04.02.2019–ன்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.31159/2018/டிபி3. நாள்.05.03.2019–ன்படியும், இந்நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் கூட்டப்பொருள் தீர்மான எண்.400. நாள்.08.03.2019ன்படி 01.04.2019 முதல் நடைமுறையில் உள்ள கட்டிட சம்மந்தமான உரிமையாணை கட்டணங்களை 25 சதவீதம் உயர்வு செய்யப்பட்டுள்ளதற்கு, பொதுமக்களிடமிருந்து ஏதேனும் ஆட்சேபனை மற்றும் ஆலோசனைக் கருத்துக்களை விளம்பரம் மேற்கொண்ட தினத்திலிருந்து 30 தினங்களுக்குள் தெரிவிக்க கோரி, மக்கள் குரல் தினசரி நாளிதழில் 13.06.2019ஆம் தேதியில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு செலவினத் தொகை ரூ.59220/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**தீர்மான எண் 445:** அனுமதிக்கப்பட்டது.
**( ந.க.எண்.978/2019/எப்1.)**

24) போடிநாயக்கனூர் நகராட்சி 7வது வார்டு சர்ச்தெருவில் சர்வே வார்டு–2, சர்வே எண். 1173 மற்றும் 1174–ல் உள்ள இடத்திலுள்ள மனை தொடர்பாக திருமதி.சே.அன்னம்மாள் என்பவர் போடிநாயக்கனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து (வழக்கு எண்.O.S.No.33/2018–ல்) வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக மேற்படி வழக்கில் வாதிடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆர்.பாலமுரளி என்பவர் வாதுரை கட்டணமாக ரூ.5000/– வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.பி.ஆர்.பாலமுரளி வழக்கறிஞருக்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**தீர்மான எண் 446:** ஒப்புதல்அளிக்கப்பட்டது.
**( ந.க.எண்.328/2018/எப்1.)**

25) போடிநாயக்கனூர் நகராட்சி சிஸ்கோஸ் உற்பத்தி மற்றும் பொறியியல் தொழில் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பழைய ஆடுவதைக் கூடத்தில் கடைகள் கட்டிமுடிக்கப்பட்ட பணிக்கு காசோலை வேண்டி, இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P (MD) No.11001/2019 தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வாதிடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், இந்நகராட்சி நியமன அரசு வழக்கறிஞர், திரு.எம். கருப்பசாமி பாண்டியன் என்பவர் வாதுரை கட்டணமாக ரூ.9500/– வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.எம். கருப்பசாமி பாண்டியன் வழக்கறிஞருக்கு வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**தீர்மான எண் 447:** ஒப்புதல்அளிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3543 /2012/இ1)**

26) திரு பி.சௌந்தரராஜன் ஒப்பந்ததாரா் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்க கோரியுள்ளாா். இந்த தொகை காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் கலம் 3ல் மற்றும் 4ல் கண்டவாறு கீழ்க்கண்ட விபரப்படியுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.47,250/—ஐ தனியருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | நாள் (2) | பக்க எண் வரிசை எண் (3) | தொகை ரூ. (4) |
|---|---|---|---|
| 1 | 24.08.15 | 22/388 | 7250 |
| 2 | 11.12.15 | 28/504 | 6500 |
| 3 | 11.12.15 | 29/525 | 8500 |
| 4 | 18.10.15 | 24/416 | 20000 |
| 5 | 23.02.15 | 14/249 | 2500 |
| 6 | 27.03.15 | 16/274 | 2500 |
| | | மொத்தம் | **47250** |

**அலுவலகக்குறிப்பு :—** மன்றம் அனுமதிக்கலாம்
**தீா்மான எண் 448:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.1130/2019/பி3)**

27) திரு.பி.சௌந்தரராஜன் ஒப்பந்ததாரா் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்க கோரியுள்ளாா். இந்த தொகை காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் கலம் 3ல் மற்றும் 4ல் கண்டவாறு கீழ்க்கண்ட விபரப்படியுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.57,288/—ஐ தனியருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண் (1)** | **நாள் (2)** | **பக்க எண் வரிசை எண் (3)** | **தொகை ரூ. (4)** |
|---|---|---|---|
| 1 | 24.12.2015 | 28/508 | 34034 |
| 2 | 22.01.2016 | 28/518 | 23254 |
| | மொத்தம் | | **57288** |

**அலுவலகக்குறிப்பு :—** மன்றம் அனுமதிக்கலாம்
**தீா்மான எண் 449:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.1129/2019/பி3)**

28) திரு பி.செளந்தரராஜன் ஒப்பந்ததாரர் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்க கோரியுள்ளார். இந்த தொகை காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் கலம் 3ல் மற்றும் 4ல் கண்டவாறு கீழ்க்கண்ட விபரப்படியுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.19,750/—ஐ தனியருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | நாள் (2) | பக்க எண் வரிசை எண் (3) | தொகை ரூ. (4) |
|---|---|---|---|
| 1 | 19.02.2016 | 29/537 | 6000 |
| 2 | 24.12.2015 | 28/507 | 7250 |
| 3 | 22.01.2016 | 28/517 | 6500 |
| | | மொத்தம் | **19750** |

**<u>அலுவலகக்குறிப்பு :—</u>** மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண் 450:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.1131/2019/பி3)**

29) இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்—1 க்கு 22.07.2015ல் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைவாக ஏலம் போனதால் நகர்மன்றம் மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது ஏலதாரராகிய திரு.எம்.முரளி என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார். (வழக்கு எண்.WP (MD) No.16937/2015) மேற்படி வழக்கின் 11.03.2019ம் தேதிய தீர்ப்பாணையில் மனுதாரரின் கோரிக்கையை ஏற்று ஏல நிபந்தனைகளின்படி மனுதாரருக்கு அவர் கூறிய ஏலக்கேள்வி தொகை ரூ.10,000/—ஐ அனுமதித்து கடையினை ஒப்படைக்க சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளை உத்திரவு பிறப்பித்துள்ளதால் அண்ணாரின் ஏலகேள்வியினை ஏற்று கடையினை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்திரவினை ஏற்று புதிய பேருந்து நிலைய கடை எண்—1 ஐ ஏலதாரரர் திரு.எம்.முரளி என்பவருக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியான ரூ.10,000/—க்கு மாத வாடகையில் ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 451:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3829 /2014/அ2)**

30) போடிநாயக்கனூர் நகராட்சி வாகன எண்:TN60V1693 வண்டிக்கு வாகன காப்பீடு 20.07.2019 உடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.11,607/— தொகையினை குடி நீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மான எண் 452:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3306/2018/இ1)**

31) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களின் செயல்முறை உத்திரவில் (ந.க.எண்.2288/2019/p2) தெரிவித்துள்ளவாறு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 எண்.15(2)–ன்படி ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் மாநில திடக்கழிவு மேலாண்மை கோட்பாடு மற்றும் உத்திகள் மாநில அரசிதழில் வெளியிடப்பட்ட 6 மாதத்திற்குள் திடக்கழிவு மேலாண்மை கொள்கைகள் தயார் செய்து அரசிடம் அனுமதி பெற்று செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதால் அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>** மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண் 453:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.6465/2012/எச்2)**

32) போடிநாயக்கனூர் நகராட்சி 32வது வார்டு சுப்புராஜ் நகர் வஞ்சிஓடை மேற்கு தெருவில் உள்ள காய்ந்த மரம் வெட்டி எடுத்துக்கொள்வதற்கும் மற்றும் சுப்புராஜ் நகர் சிட்னி விளையாட்டு மைதான வளாகத்தில் 11 தென்னை மரங்கள் பட்டுபோய் உள்ளதை வெட்டி எடுத்துக்கொள்வதற்கும் பொது ஏலம்விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண் 454:** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.2475 /2019/இ1)**